உ

சிவமயம்



துதி

வானுலகும் மண்ணுலகும்வாழ மறைவாழ
பான்மைதகு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத மைந்துமுக மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவியஞ்சலி செய்கிற்பாம்.

# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஹேர்ணிங்,டென்மார்க்

## *மஹா கணபதி ஹோம விஞ்ஞாபனம்*

### *20-05-2024 திங்கட்கிழமை*

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் வைகாசித்திங்கள் 7ம் நாள் **20-05-2024 திங்கட்கிழமை** எம்பெருமானுக்கு ***மஹா கணபதி ஹோமம்*** நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஹோமத்திலும்,பூஜை வழிபாட்டிலும் பங்குபற்றி விநாயகப்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## *கிரியாகால விபரம்*

- ***19-05-24 (வைகாசி 6ம் நாள்) ஞாயிறு மாலை 6.00 மணிக்கு***
  விநாயக வழிபாட்டுடன் கணபதி ஹோம அனுக்ஞை

- ***20-05-24 (வைகாசி 7ம் நாள் ) திங்கள் காலை 7-00 மணிக்கு***
  புண்ணியாகவாசனம், கும்பபூஜை, கணபதி ஹோம அக்னி ஆவாகனம், திரவியஹோமம், திரவிய அபிஷேக உபசார பூஜை, மஹா பூரணாகுதி, விஷேட கும்பபூஜை வேத தோத்திர பாராயணம், பிரதான கும்பவீதிவலம், பிரதான கும்ப அபிஷேகத்தை தொடர்ந்து எம்பெருமானுக்கு விஷேட பூஜை இடம்பெற்று, நிறைவாக விபூதிப்பிரசாதம், **அன்னதானம்** வழங்கப்படும்.

***குறிப்பு:*** *பூ பால் பழம் தயிர் பூமாலை, அன்னதான பொருட்கள் முதலியன அன்பளிப்புச் செய்ய விரும்பும் அடியார்கள் உரிய காலத்துக்கு முன்னர் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தொடர்புகளுக்கு : **97225511, 29253851**

இங்ஙனம்
பரிபாலனசபையினர்

**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்** teglvænget -93, 7400 Herning. www.pillayar.dk